## சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதும் நிதித் தகவல்களை சமர்ப்பிப்பதும்

**பயிற்சி 01**

01. குருணாகல் மாவட்டத்தின் பொல்கஹவெல சமுர்த்தி பிரதேச அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்ற ‘‘ஏப்பகந்த’’ சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு 2013ம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 09 வது பிரிவிற்கமைய தாபிக்கப்பட்ட சமுதாய அடிப்படை அமைப்பொன்றாகும்.

02. ‘‘ஏப்பகந்த’’ சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு 2017ம் ஆண்டின் மார்ச் 07ம் திகதி பிரசுரிக்கப்பட்ட விஷேட வர்த்தகமானியில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குகள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ‘‘சமுதாய அடிப்படை 01/2017/01’’ என்ற இலக்கத்தினையுடைய சமுர்த்தி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளுக்கமைய 2017 மார்ச் 23ம் திகதி அதன் ஆரம்ப பொதுக் கூட்டம் ‘‘ஏப்பகந்த’’ ஐக்கிய சனசமூக மண்டபத்தில் நடாத்தபட்டது.

03. ஆரம்ப பொதுக் கூட்டத்திற்கு முன்னர் இருந்த சமுர்த்தி சங்கத்தின் அங்கத்தவர்கள் சகலரும் (40) அத்துடன் புதிய அங்கத்தவர்கள் 10 பேரும் கலந்து கொண்டனர். அன்றைய தினம் மாதாந்த அங்கத்துவ கட்டணம் ரூபா 100/ என பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மாணிக்கப்பட்டது.

04. 2017 மார்ச் மாதத்திலிருந்து 2019 டிசெம்பர் வரையில் பொதுச்சபைக் கூட்டங்கள் சகலதும் நடாத்தப்பட்டுள்ளது.

05. 2017.03.23ம் திகதியிலிருந்து 2019.12.31ம் திகதி வரையில் ஏப்பகந்த சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்குறிய வரவு செலவுகளின் பொழிப்புப்படிவம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**வரவு செலவு பட்டியல்**

| விபரம் | வரவு | விபரம் | செலவு |
|---|---|---|---|
| 2017.03.23 ம் திகதியில் கையிருப்பிலுள்ள காசு | - | எழுது கருவிகள் | 7,200 |
| 2017.03.23ம் திகதியில் வங்கியிலுள்ள காசு | - | உபசரணைச் செலவு | 12,300 |
| அங்கத்துவப் பணம் | 170,000 | சமுர்த்தி பிரதேச அமைப்பின் அங்கத்துவ கட்டணம் | 3,000 |
| விசேட உதவிகள் | 5,000 | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பதிவுக் கட்டணம் | 1,100 |
| சமுர்த்தி சங்கக் கணக்கிலிருந்து கிடைத்த பணம் | 20,000 | அச்சுக் கட்டணம் | 6,000 |
| கிடைத்த சமுர்த்தி கொடி நிதி | 6,500 | அனுப்பிய சமுர்த்தி கொடி நிதி | 6,500 |
| கிடைத்த வங்கி வட்டி | 4,000 | 2019.12.31ம் திகதியில் வங்கியிலுள்ள பணம் | 169,000 |
| | | 2019.12.31ம் திகதியில் கையிருப்பிலுள்ள பணம் | 400 |
| | **205,500** | | **205,500** |

06. மேலுள்ள வரவு செலவு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக 2019.12.31ம் திகதியில் கீழ் குறிப்பிடப்படும் தகவல்களையும் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

(அ) 2019 டிசெம்பர் மாதத்தின் பொருட்டு அங்கத்தவர்கள் 05 பேரின் அங்கத்துவக் கட்டணம் கிடைக்க வேண்டியுள்ளது.
(ஆ) 2020 ஜனவரி வரையில் அங்கத்தவர்கள் 05 பேர் அங்கத்துவக் கட்டணத்தை செலுத்தியிருந்தனர்.
(இ) வெளிநிறுவனம் ஒன்றிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த உபகரணங்களின் பெறுமதியானது ரூபா 10,000/= அகும்

07. 2020.01.25ம் திகதி வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் நடாத்தப்பட்டதுடன் அன்றைய தினம் சகல அங்கத்தவர்களும் அங்கத்துவ பணத்தினை உரிய பிரகாரம் செலுத்தி முடித்துள்ளனர். சகல நிதிகளும் அடுத்த நாள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

08. 2020.02.15ம் திகதி சமுர்த்தி பிரதேச அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறுவதனால் சமுதாய அடிப்படை அமைப்பின் வருடாந்த நிறுவன அங்கத்துவ கட்டணத்தை செலுத்தும் பொருட்டு ரூபா 1000/= தொகை கௌரவ பொருளாளரால் சேமிப்புக் கணக்கிலிருந்து மீளப்பெற்றுக்கொண்டு கௌரவ தலைவருக்கு வழங்கப்பட்டது.

09. 2020.02.20ம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் 5 அங்கத்தவர்கள் வருகை தரவில்லை என்பதுடன் வருகை தந்த சகலரும் ரூபா 100/= வீதம் அங்கத்துவ பணத்தை கௌரவ பொருளாளரிடம் செலுத்தினார்கள். கௌரவ பொருளாளாரால் மறுநாளிலேயே அப்பணம் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

10. சமுதாய அடிப்படை அமைப்பு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் 2020ம் ஆண்டிற்கான பதிவுக் கட்டணத்தை புதுப்பிக்கும் பொருட்டு பொல்கஹவெல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்திற்கு ரூபா 300/= ஐ செலுத்திய உறுதிப்பாட்டுக் கடிதம் 2020.12.20ம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

11. Covid – 19 வைரஸ் நாடுபூராகவும் பரவுவதனைத் தடுக்கும் முகமாக அரசாங்கத்தினால் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக 2020 மார்ச் - ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களின் மாதாந்த பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்த முடியாமல்போனது.

12. அரசாங்கத்தினால் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக சமுர்த்தி பயனாளிகளுக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளை கவனத்திற் கொண்டு சமுர்த்தி வங்கியால் ''சஹன பியவர'' மற்றும் ''அருணலு சஹன'' என ரூபா 10,000/= க்கான சலுகைக் கடன் திட்டங்கள் 02, ரூபா 5,000/= வீதம் இரண்டு சந்தர்ப்பங்களில் விடுவிக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 2020.04.05ம் திகதி ''அருணலு சஹன'' கடனைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்த மற்றும் தகுதியுடையய 05 பயனாளிகளுக்கு ரூபா 25,000/= சமுர்த்தி வங்கியால் சேமிப்புக் கணக்கிற்கு பணம் அனுப்பப்பட்டதுடன் கௌரவ தலைவர், மற்றும் கௌரவ பொருளாளரால் அத்தொகை சேமிப்புக்கணக்கிலிருந்து மீளப் பெற்றுக் கொண்டு குறித்த விண்ணப்பதாரிகளுக்கு விடுவிக்கப்பட்டது.

13. 2020.06.20 ம் திகதி கூடிய மாதாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் வருகை தந்திருந்ததுடன் மார்ச் ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் தவிர்ந்த நிலுவையான அங்கத்துவக் கட்டணத்துடன் அங்கத்துவப்பணம் செலுத்தப்பட்டது. அன்றைய தினம் ரூபா 5000/= சில்லறைப் பணம் கௌரவ பொருளாளரின் கையிருப்பில் வைத்துக் கொள்ள பொதுக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

14. முன்னைய தினம் கிடைக்கப்பெற்ற அங்கத்துவ பணம் சகலதும் 2020.06.21ம் திகதி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டதுடன் சில்லறைச் செலவுக்காக ரூபா 5000/= கௌரவ பொருளாளரால் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

15. 2020.06.30 திகதி எழுதுகருவிக்கு ரூபா 800/= போட்டோ பிரதி கட்டணம் ரூபா 250/= வும் உபசரணைச் செலவு ரூபா 600/= ஆகியவை சில்லறைப்பணத்திலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

16. 2020.07.20ம் திகதி மாதாந்த பொதுச்சபைக் கூட்டம் நடாத்தப்பட்டதுடன் அன்றைய தினம் அங்கத்தவர்கள் 08 பேரைத் தவிர எஞ்சிய சகலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வருகை தந்திருந்த அங்கத்தவர்களில் 03 பேர் முன்வரும் மாதத்திற்கும் அங்கத்துவப் பணத்தினை செலுத்தியிருந்தனர். அங்கத்தவர் உதவிகள், மற்றும் விசேட நபர்கள் உதவிகளின் பிரகாரம் Covid – 19 வைரஸ் நிலை காரணமாக பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கும் பொருட்டு பொதுச் சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

17. 2017.07.20ம் திகதியன்று முன்னைய திகதியில் கிடைத்த சகல அங்கத்துவ் பணமும் கௌரவ பொருளாளரால் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டதுடன் அன்றைய தினம் உபசரணைச் செலவாக ரூபா 500/= வும் பொதுச் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 1,500/= இற்கு கணிப்பான் (Calculator) ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டது.

18. உலர் உணவுப் பொருட்களை வழங்கும் பொருட்டு 2017.07.25ம் திகதி சகல அங்கத்தவர்களிடமிருந்தும் ரூபா 100/= வீதமும் பிரபலமானவர் ஒருவரிடமிருந்து ரூபா 5,000/= ற்கான உதவித் தொகையொன்றும் சேர்ந்திருந்தது. உலர் உணவுப் பொருட்களின் பொருட்டு செலவாகிய தொகையானது ரூபா 8,000/= ஆகும். எஞ்சிய தொகை வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

19. 2020.08.15ம் திகதி வரை சமுர்த்தி கொடி வேலைத்திட்டத்தின் மூலம் சீல் வைக்கப்பட்ட உண்டியல் ஒன்றில் சேகரிக்கப்பட்ட ரூபா 10,000/= இற்கான தொகை பொல்கஹவெல சமுர்த்தி பிரதேச அமைப்பிற்கு அனுப்பப்படும் முகமாக சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

20. 2020.08.30ம் திகதி சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் சேமிப்புக் கணக்கின் வரவின் பொருட்டு கிடைத்த ஒப்பந்த பிடிபணமான ரூபா 5,000/= இற்கான காசோலை, சமுர்த்தி சுற்றறிக்கை ஆலோசணைக்கமைய வங்கியில் வைப்பிலிடப்பட்டது. இன்றைய தினம் சகல மாதாந்த அங்கத்துவப் பணம் நிலுவைத் தொகையுடன் கிடைக்கப்பெற்றது. அத்தொகை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

21. சமுர்த்தி “அருணலு சஹண” கடன் தவணைப்பணம் வட்டியின்றி 06 மாத சலுகைக் காலத்தின் பின்னர் செலுத்த வேண்டியிருந்தும் அக்கடனை பெற்றுக் கொண்ட 5 பேரால் 2020.09.15ம் திகதி கடன் தவணைப்பணம் ரூபா 500/= வீதம் மீளச் செலுத்தப்பட்டது.

22. சமுர்த்தி சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கமைய கௌரவ தரைவர் சமுர்தி பிரதேச அமைப்பின் மாதாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாக ரூபா 100/= பிரயாணச் செலவினை வழங்குவதற்கு பொதுச்சபைக் கூட்ட அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. அது 2020, ஆகஸ்ட மற்றும் செப்டம்பர் மாதத்தின் பொருட்டு 2020.09.30ம் திகதி சில்லறைப்பணத்திலிருந்து செலுத்தப்பட்டதுடன் அன்றைய உபசரணைச் செலவாக ரூபா 550/வும் எழுதுகருவி செலவாக ரூபா 300/ஆக இருந்தது.

23. 2020.09.30ம் திகதி சேகரிக்கப்பட்ட அங்கத்துவப் பணம் அன்றைய தினமே வங்கியில் வைப்பிலிடப்பட்டது. (03 பேர் 2021 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதத்தின் பொருட்டு முன்னதாக செலுத்தியிருந்ததுடன் 05 பேரிடமிருந்து அங்கத்துவப் பணம் கிடைக்கப் பெறவில்லை.)

24. 2020.09.30ம் திகதியின் பொதுச் சபைக் கூட்டத்தின் அங்கீகாரத்திற்கு அமைய நிறைவேற்றுக் குழுவிற்குள் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் மிகையான தொகையினை அங்கீகரிக்கப்பட்ட சமுர்த்தி வங்கியொன்றில் நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் 2020.10.01ம் திகதி ரூபா 150,000/ முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

25. COVID – 19 வைரஸ் நிலை நாட்டினுள் 2வது முறையாக பரவியதன் காரணமாக 2020ம் அண்டின் ஒக்டோபர். நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களின் பொருட்டான பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்படவில்லை என்பதுடன் அக்காலத்திற்குறிய அங்கத்துவப்பணம் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

26. 2020.12.31ம் திகதி வங்கியில் சேமிப்புக் கணக்கிற்கு வட்டியாக ரூபா 2,500/= கிடைக்கப்பெற்றிருந்தது.

27. ஏப்பகந்த சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் கௌரவ பொருளாளரான தங்களுக்கு சமுர்த்தி சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு ஏற்ப கீழ் குறிப்பிடப்படும் நிதித் தகவல் கூற்றினைத் தயாரிக்குமாறு பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

    (1) 2017.03.23ம் திகதி முதல் 2019.12.31ம் திகதிவரையிலான காலத்திற்குறிய பொழிப்பாக்கஞ்செய்யப்பட்ட வருமானச் செலவுக்கூற்று.
    (2) 2019.12.31ம் திகதியில் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று.
    (3) 2020ம் ஆண்டுக்குறிய ஆரம்ப ஆவணங்களிலும் கொடுக்கல் வாங்கல் பொழிப்பேட்டிலும் ஆண்டுக்குறிய ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு மூல ஆவணங்கள். புத்தகங்கள், கடிதங்கள், கொடுக்கல் வாங்கல் பொழிப்பேடு, மற்றும் கொடுக்கல் வாங்கல் பொழிப்புப் படிவத்தினை தயாரித்தல்.
    (4) 2020.12.31ம் திகதியில் முடிவடையும் காலத்திற்குறிய “வருமானச் செலவுக் கூற்று”.
    (5) 2020.12.31ம் திகதியில் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று.